ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ

அதி விசேஷமானது

අංක 2212/53 - 2021 ජනවාරි මස 29 වැනි සිකුරාදා - 2021.01.29

*2212/53 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு சனவரி மாதம் 29 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும்

*ச. அ. இல. : பிஎஸ்/சிஎஸ்ஏ/00/1/14/28*

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிமேதகு சனாதிபதி**
**கோட்டாபய ராஜபக்ஷ அவர்களினால்**

(முத்திரை)

**கோட்டாபய ராஜபக்ஷ**

1. கௌரவ தம்மிக பிரியந்த சமரக்கோன் ஜயவர்த்தன அவர்கள்,
   உயர்நீதிமன்ற நீதிபதி
2. கௌரவ (திருமதி) கேமா குமுதினீ விக்கிரமசிங்க அவர்கள்,
   உயர்நீதிமன்ற நீதிபதி
3. கௌரவ ரத்னபிரிய குருசிங்க அவர்கள்,
   மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி

ஆகியோருக்கு,

வாழ்த்துக்கள்!

விசாரணை ஆணைக்குழுக்கள் சட்டத்தின் (393 ஆம் அத்தியாயமான) 2 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம் 2015, சனவரி மாதம் 08 ஆந் திகதி ஆரம்பமாகி 2019, நவெம்பர் மாதம் 16 ஆந் திகதி முடிவடைந்த கால எல்லைக்குள் மற்றும் /அல்லது 2015, சனவரி மாதத்தில் மற்றும் ஓகத்து மாதத்தில் நடாத்தப்பட்ட சனாதிபதி தேர்தலுக்கு மற்றும் /

1A - G 33264 — 385 (2021/01)

*இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

அல்லது பொதுத் தேர்தலுக்கு முன்னர் பதவிகளை வகித்த அரச உத்தியோகத்தர்கள், அரச கூட்டுத்தாபன ஊழியர்கள், ஆயுதப்படை மற்றும் பொலிஸ் சேவையின் உறுப்பினர்களுக்கு இடம்பெற்றுள்ளதாகக் கூறப்படும் அரசியல் ரீதியிலான பழிவாங்கல்கள் தொடர்பாக விசாரித்துத் தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கான சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை தொகுதி 03 ஆக மற்றும் கடிதப் பிழைகள் மற்றும் அச்சுப்பிழைகளைத் திருத்துதல் ஆகிய பின்னிணைப்புகள் என்பவை எனக்குச் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் சொல்லப்பட்ட இறுதி அறிக்கையின் விடய இல. 08, 09 மற்றும் 10 என்பவற்றின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தீர்மானங்கள் மற்றும் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைக்கப்பெற்றுள்ளதைக் கவனத்திற் கொண்டும்,

சொல்லப்பட்ட தீர்மானங்கள் மற்றும் பரிந்துரைகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பில் குறிப்பிடப்படாத மற்றும் சொல்லப்பட்ட அரசியலமைப்புக்கு முரணாகத் தாபிக்கப்பட்ட தேசிய நிறைவேற்றுச் சபையொன்றின் மூலம் மற்றும் ஊழல் தடுப்புக் குழு எனும் பெயரைக்கொண்ட அரசியல் அமைப்பொன்றினால் மேற்சொல்லப்பட்ட விசாரணை ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையில் விடய இல. 09 மற்றும் 10 இல் குறிப்பிடப்பட்டுள்ள முறைப்பாட்டாளர்களை நேரடியாக மற்றும் மறைமுகமாக அரசியல்ரீதியான பழிவாங்கல்களுக்கு உட்படுத்துவதற்காக குற்றவியல் வழக்குகள் நடவடிக்கைக் கோவையின் ஏற்பாடுகளுக்கு முரணாகத் தாபிக்கப்பட்ட நிதிக் குற்றவியல் புலனாய்வுப் பிரிவு எனும் பெயரைக்கொண்ட பொலிஸ் பிரிவொன்றின் மூலம் மற்றும் இலஞ்சம் மற்றும் ஊழல் குற்றச்சாட்டுகள் பற்றிய புலனாய்வு ஆணைக்குழு, இலங்கைப் பொலிஸின் பொலிஸ் விசேட புலனாய்வுப் பிரிவு மற்றும் குற்றவியல் விசாரணைத் திணைக்களம் என்பன பயன்படுத்தப்பட்டுள்ளது எனச் சொல்லப்பட்ட அறிக்கையின் தீர்மானங்களிலும் பரிந்துரைகளிலும் குறிப்பிடப்பட்டுள்ளதாதலாலும்,

அதன்வண்ணம், மேற்போந்த விசாரணை ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடய இல.08 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தீர்மான இல. 1 மற்றும் பரிந்துரை இல. 1 என்பவற்றை நடைமுறைப்படுத்துவதற்காக விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவொன்றை நியமித்தல் அல்லது பாராளுமன்றத்தினால் பரிந்துரை செய்யப்படும் வேறு பொருத்தமான பொறிமுறையொன்றை உருவாக்குவதற்குத் தேவையான நடவடிக்கையை எடுத்தல் வேண்டுமென அமைச்சரவையினால் தீர்மானிக்கப்பட்டுள்ளதைக் கவனத்தில்கொண்டும்,

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி பதவியை வகிக்கும் கோட்டாபய ராஜபக்ஷ ஆகிய நான், தங்களின் விவேகம், திறமை மற்றும் பற்றுறுதி என்பவற்றின்மீது மிகுந்த பக்தியும் நம்பிக்கையும் வைத்து, 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுக்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் திருத்தப்பட்ட, தேசிய அரசுப் பேரவையின் 1978 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுக்கள் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய மேற்சொல்லப்பட்ட உங்களை அதாவது,

1. கௌரவ தம்மிக பிரியந்த சமரக்கோன் ஜயவர்த்தன அவர்கள்,
   உயர்நீதிமன்ற நீதிபதி

2. கௌரவ (திருமதி) கேமா குமுதினீ விக்கிரமசிங்க அவர்கள்,
   உயர்நீதிமன்ற நீதிபதி

3. கௌரவ ரத்னபிரிய குருசிங்க அவர்கள்,
   மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி

கீழ்க்காணப்படும் பணிகளைச் செயற்படுத்துவதற்காக அதாவது,

1. மேற்போந்த அறிக்கையில் விடய இல.08 இல் குறிப்பிடப்பட்டுள்ள எதிர்மனுதாரர்கள் இங்கு முன்னர் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களும் உள்ளடங்கலாக,

   I. இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் ஏற்பாடுகளின்வண்ணம் வழங்கப்பட்டுள்ள சத்தியத்தை மீறி, சொல்லப்பட்ட அரசியலமைப்பின் ஏற்பாடுகளை மீறுதல்
   II. அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்தல் அல்லது அதிகாரத்தை முறையற்ற விதத்தில் பாவித்தல், தலையீடு செய்தல், மோசடி செய்தல், ஊழல், குற்றவியல் துஷ்பிரயோகம், குற்றவியல் நம்பிக்கை மீறல் அல்லது உறவினர்களுக்குச் சலுகை செய்தல்
   III. ஒருவரிடமிருந்து அரசியல் ரீதியாகப் பழிவாங்கப்படல்
   IV. யாரேனும் ஒருவரது-

      (அ) ஏதாவதொரு நியமனம் வழங்கப்படும்போது அல்லது இடமாற்றம் செய்யும்போது,
      (ஆ) ஏதாவதொரு பதவியுயர்வு வழங்கப்படும்போது,

(இ) சேவையை முடிவுறுத்தும்போது,

ஏதாவது முறைகேடொன்று

(ஈ) ஏதாவது எழுத்துமூலமான சட்டத்தை மீறல்,

மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பது பற்றியும் மேற்போந்த எதிர்மனுதாரர்கள் அவ்வாறு எந்தளவுக்கு பொறுப்புக் கூறுவேண்டும் என்பதுபற்றி மேலும் புலனாய்வு செய்து அறிக்கையிடுவதற்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 81 ஆவது உப பிரிவு மற்றும் 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுக்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் திருத்தப்பட்ட, தேசிய அரசுப் பேரவையின் 1978 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுக்கள் சட்டத்தின் 09 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய குறித்த அறிக்கையின்வண்ணம் யாரேனும் நபரொருவரை சமூக இயலாமைக்கு உட்படுத்துவதற்குப் பரிந்துரை செய்வதற்காகவும் எனது ஆணையாளர்களாக இத்தால் நியமிக்கின்றேன்.

மேலும், மேலே சொல்லப்பட்ட, விசேட விசாரணை ஆணைக்குழுவின் தலைவராக உயர் நீதிமன்ற நீதிபதி கௌரவ தம்மிக பிரியந்த சமரக்கோன் ஜயவர்த்தன ஆகிய உங்களை இத்தால் நியமிக்கின்றேன்.

மேலும், மேற்குறிப்பிடப்பட்ட விடயங்களைப் புலனாய்வு செய்வது தொடர்பில் தேவையெனத் தங்களுக்குத் தெரிகின்றவாறு சகல விசாரணைகளை நடாத்துவதற்கும் மற்றைய அனைத்து புலனாய்வுகளை மேற்கொள்ளுவதற்கும் மேற்சொல்லப்பட்ட ஆணையாளர்கள் ஆகிய உங்களுக்கு இத்தால் அதிகாரம் மற்றும் தத்துவங்களை வழங்குவதோடு, இவ் அதிகாரப்பத்திரத்தின் திகதியிலிருந்து மூன்று மாத காலத்திற்குள் தேவையான விசாரணை மற்றும் புலனாய்வுகளை மேற்கொண்டு உங்களது முடிவுகள் மற்றும் பரிந்துரைகள், விதிக்கப்படும் தண்டனைகள் என்பவற்றை மேற்கோள்காட்டி இறுதி அறிக்கையை அல்லது இடைக்கால அறிக்கைகளை உங்களின் கையொப்பத்தோடு எனக்குச் சமர்ப்பிக்குமாறு இத்தால் உங்களுக்குக் கட்டளையிடுகின்றேன்.

மேலும், மேற்போந்த விடயத்துக்குரிய ஏதேனும் புலனாய்வு அல்லது விசாரணையின் ஏதாவதொரு பகுதியொன்றை வெளிப்படையாக நடத்தக்கூடாது எனத் தாங்கள் கருதும்பட்சத்தில், அப்பகுதியை வெளிப்படையாக நடாத்தக் கூடாது என நான் உங்களுக்குக் கட்டளையிடுகின்றேன்.

மேலும் உங்களின் புலனாய்வு அல்லது விசாரணைப் பணிகளுக்காகத் தங்களால் ஒத்துழைப்பு அல்லது தகவல் கோரக்கூடிய சகல அரச உத்தியோகத்தர்கள் மற்றும் வேறு நபர்களினால் அப்பணிகளுக்காக உரியவாறு வழங்கப்படக்கூடிய சகல ஒத்துழைப்புகளையும் வழங்க வேண்டுமென்பதோடு, வழங்கக்கூடிய சகல தகவல்களையும் வழங்க வேண்டுமென்பதையும் இத்தால் கட்டளையிட்டுப் பணிப்புரை விடுக்கின்றேன்.

மேலும், தேசிய அரசுப் பேரவையின் 1978 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க சொல்லப்பட்ட சட்டத்தின் 14 ஆம் பிரிவின் ஏற்பாடுகள், இவ் ஆணைக்குழுவுக்கு ஏற்புடையதாக இருத்தல்வேண்டும் என்பதனை இத்தால் குறிப்பிடுகிறேன்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பகிரங்க இலச்சினையின் கீழ், இரண்டாயிரத்து இருபத்தோராம் ஆண்டு சனவரி மாதம் 28 ஆந் திகதியாகிய இன்று கொழும்பில் வழங்கப்பட்டது.

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

**பீ. பி. ஜயசுந்தர,**
சனாதிபதியின் செயலாளர்.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.